தேவன் உங்களை ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கும்படி இப்பூமியில் சிருஷ்டித்தார். உங்களிடத்தில் ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ற அன்பு, சந்தோசம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் கலா 5:22, 23-ல் சொல்லப்பட்டிருக்கிறபடி இப்படிப்பட்ட கனிகள் காணப்படுகிறதா என்று ஒவ்வொரு வருடமும் எதிர்பார்க்கின்றார் இந்த வருடத்தையும் உங்களுக்கு கூட்டி கொடுத்திருக்கின்றார். பிரியமான வேதபிள்ளையே இன்றே இப்பொழுது உங்களை நித்தியத்தில் வழிநடத்த ஆவலோடு காத்துக் கொண்டிருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் உங்களை முற்றிலும் ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது தேவனுடைய இராஜ்யத்திற்கு ஏற்ற ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கிற பிள்ளையாக மாறுவீர்கள்.

இவ்வருடத்திலும் கனி கொடாதவர்களாக இருந்தீர்கள் என்றால் உவமையில் சொல்லப்பட்ட பிரகாரம் வெட்டிப்போடுவார் பிரியமான தேவ பிள்ளையே உன் தீர்மானம் என்ன? இப்புது வருடத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து மனந்திரும்பி, தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியை தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலியிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் என்று சங்கீதக்காரனாகிய தாவீது சொன்னது போல் உங்கள் வாழ்க்கையை மாற்றியமைத்து கொண்டு வாழ இதோ ஆண்டவர் இந்த வருடத்தை உங்களுக்குக் கூட்டி கொடுத்திருக்கிறார். கர்த்தர் உங்களை வழி நடத்துவாராக! ஆமென்.

## ★ சபை செய்திகள்:

சென்ற மாதம் 26-ம் தேதி சுவிசேஷக் கூட்டம் மாலை 5 மணிக்கு வத்தலக்குண்டில் கிறிஸ்துவின் சபையார்கள் கூடுமிடத்தில் நடைபெற்றது அநேகர் வந்து கலந்துகொண்டு பயன்பெற்றனர் இக்கூட்டத்தில் மதுரையிலிருந்து சகோ. பிலேமோன் ராஜ் குடும்பத்துடன் வருகைதந்து செய்தியளித்தார்.

## ★ ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்:

யாக் 5:16

சுகவீனமாக இருக்கும் சகோ சிதம்பரத்திற்காக

## ★ பரிசு

டிசம்பர் மாத இதழின் வேத அறிவுப்போட்டியில் பரிசு பெறுபவர்கள்.

1. K. பாலசுப்ரமணியன் வதிலை
2. P. தயாளன் ,,
3. A. காஸ்பல் ,,
4. X. அருள்ராஜ் ,,
5. J. மேரி எலிசபெத் ,,
6. T. கனகராஜ் வாடிப்பட்டி
7. V. ஜெனிவின் திண்டுக்கல்
8. N. தமிழ்வாணன் அம்பிளிக்கை
9. J. ராணி ,,
10. J. சாராள் ரோஸ் ,,
11. பிரிசில்லாதாஸ் K. பசலாடா
12. S. அமுதமணி மேல்விசாரம்
13. P. சின்னம்மா சித்தூர். (ஆந்திரா)
14. V. அனிதா சொக்கலிங்கபுரம்

## ✡ சென்ற இதழின் விடைகள்

1. கர்த்தர். மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கு உபா 34:6
2. கல்வியை நீதி 16:21
3. பரம பிதா நடாத நாற்றெல்லாம் மத் 15:13
4. வசனமே யோவா 17:17
5. சாப்பிடவும் கூடாது. 11 தெச 3:10
6. யோசுவா
7. விசுவாசமுள்ள ஜெபம்
8. ஏனோக்கு
9. நன்மையால்
10. லூக்கா

## இம்மாத வேத அறிவுப் போட்டி:

1. இந்தக்கடைசி நாட்களில் (தேவன்) யார் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்?
2. ஐனேயாவை சுகமாக்கியது யார்?
3. மீன் வயிற்றிலே இராப்பகல் மூன்று நாள் இருந்தவன் யார்?
4. இது இந்த வருஷமும் இருக்கட்டும் என்று சொன்னது யார்?
5. பாதாளத்தின் வாசல்கள் யாருடைய சபையை மேற்கொள்வ-தில்லை?
6. மறைவானவைகள் யாருக்கு உரியவைகள்?
7. புதிய ஏற்பாட்டில் சபை ஆராதனைகளில் வாத்திய கருவிகளோடு தேவனைத் தொழுதுகொண்டார்களா?
8. உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரை கிறுக்கி போடும் என்று கூறியது யார்?
9. பன்னிரெண்டு ஏர் பூட்டி உழுதவன் யார்?
10. சுவாமி என்பது விக்கிரகங்களுக்குக்கொடுக்கப்பட்ட நாமமா? அல்லது தேவனுக்குக் கொடுக்கப்பட்ட நாமமா?

முதல் ஐந்திற்கு வேத ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு விடைமட்டும் கீழ்க்காணும் முகவரிக்கு ஒரு போஸ்ட் கார்டில் எழுதி இம்மாத இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பவும். சரியான விடை எழுதுபவருக்கு பரிசு அனுப்படும்.

எங்களோடு சேர்ந்து தேவனை தொழுதுகொள்ள விரும்புகிறவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

கிறிஸ்துவின் சபை,
தண்ணீர் டாங்க் சமீபம்,
வத்தலக்குண்டு

If undelivered please return to:
THE EDITOR
**Word of Christ, Post Box No. 5**
**BATLAGUNDU. Anna Dt.**

**For Private Criculation only.**

Published by Batlagundu church of Christ and
Printed at Shanthi Press Batlagundu-62420.